# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

## அசல் வழக்கு எண். 210/2015

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. அருள்குமார் | மதம் | .. இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. நடராஜன் | தொழில் | .. விவசாயம் |
| வயது | .. 51 | ஜாதி | .. கொங்குவேளாளர் |
| கிராமம் | .. கரியானூர் | நாள் | .. 22.02.2022 |
| வட்டம் | .. சங்ககிரி | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திரு. அருள்குமார் என்பவரிடமிருந்து இந்நீதிமன்றத்தில் உதவியாளர் கிரேடு 3 ஆக பணிபுரியும் திருமதி. கோகிலா என்பவரால் சத்தியப் பிரமாணம் பெறப்பட்டது.

வா.சா.1 – அருள்குமார் - 1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை.

நீங்கள் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாணப்பத்திரிகையில் கூறியுள்ள விபரங்கள் உங்களுக்குத் தெரியுமா என்றால், தெரியும். இந்த வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் கோயிலுக்கு செல்லும் வழியை தடை செய்து வருகிறார்கள் அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். 1, 2 பிரதிவாதிகள் உங்களுக்கு நெருங்கிய சொந்தங்களா என்றால், இல்லை. வழக்கு சொத்து கோயிலுக்கு சொந்தமான நிலம் என்று சொன்னால், சரிதான். கோயில் எங்களுடைய பங்காளிகளுக்கு உரிமைபட்டது என்று சொன்னால், சரிதான். கோயிலில் நீங்கள் என்னவாக உள்ளீர்கள் என்றால், தர்மகர்த்தாவாக உள்ளேன். உங்கள் தந்தையார் கோயிலில் தர்மகர்த்தாவாக எத்தனை ஆண்டு காலம் இருந்தார் என்றால், சுமார் 50 ஆண்டு காலம் இருந்தார். தர்மகர்த்தா பொறுப்பை எப்போது எடுத்துக் கொண்டீர்கள் என்றால், எனது தந்தை இறந்தபிறகு எடுத்துக்கொண்டேன். தர்மகர்த்தா பொறுப்பை நீங்களாக எடுத்துக்கொண்டீர்களா அல்லது உங்கள் பங்காளிகள் அனைவரும் சேர்ந்து நியமித்தார்களா என்றால், எனது பங்காளிகள் அனைவரும் சேர்ந்து என்னை தர்மகர்த்தாவாக நியமித்தார்கள். வழக்கு சொத்து எந்தெந்த சர்வே எண்களில் உள்ளது என்றால், சர்வே எண்.384/5 இல் கோவில் உள்ளது. சர்வே எண்.384/6 இல் கோவிலுக்கு சொந்தமான காலி இடம் உள்ளது. சர்வே எண்.384/6

காலி இடமாக உள்ளதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், செய்துள்ளேன். சர்வே எண்.384/6 இல் உள்ள இடம் கோவில் நிலம் இல்லை என்றாலும், அது 1 ஆம் பிரதிவாதியின் அம்மா பெயரில் உள்ளது என்றாலும், சரியல்ல. அரசாங்க ஆவணம் அ பதிவேட்டின்படி சர்வே எண்.384/6 குட்டியம்மாள் என்பவர் பெயரில்தான் உள்ளது என்று சொன்னால், சரியல்ல.

1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி வா.சா.1 இன் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம் / அருள்குமார்

ஒப்பம் / திரு. ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.